கூடுதல் மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், கடலூர்

**O.S.No.92/2004** தேதி:**26.08.2025**

வாதி தரப்பு சாட்சி -2 (முத்துகிருஷ்ணன், த/பெ.கணேசன்) சத்திய பிரமாணம் செய்து வைக்கப்பட்டார்.

<u>**7** ஆம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>

1) நான் என்ன தொழில் செய்துவருகிறேன் என்றால் நான் மகாராஜா என்ற பெயரில் உணவகம் நடத்தி வருகிறேன். இந்த வழக்கில் கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் அசல் வழக்கு எண் 225/2003 ல் 30.10.2003 தேதியிட்ட தீர்ப்புரையின் மூலம் வழக்கு சொத்தினை விற்க அனுமதி பெறப்பட்டது என்றால் ஒரு தலையான தீர்ப்பு வாங்கினார்கள் ஆனால் அது சரியல்ல.

2) அவ்வழக்கில் நான் தரப்பினர் இல்லை என்றால் சரிதான். நான் அவ்வழக்கின் மீது மேல் முறையீடு தான்தாக்கல் செய்து இருக்க வேண்டும் என்றாலும் ,இந்த வழக்கு தாக்கல் செய்ய முடியாது என்றாலும் சரியல்ல. நான் சரியான முறையில் தான் நீதிமன்றத்தை அனுகியுள்ளேன்.

3) வழக்கு சொத்து வெள்ளப்பாக்கம் கிராமத்தில் உள்ளது என்றால் சரிதான். வழக்கு சொத்தினை விற்பனைக்கு கொடுக்காததால் அதில் உள்ள பம்பு செட் எல்லாம் திருடு போய் விட்டது என்றால் சரியல்ல. அதன் காரணமாக நான்கடலூர் புதுநகர் காவல் நிலையத்தில் புகார் அளித்துள்ளேன் என்றால்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 05:02:41 +0530

சரியல்ல.

4) 1 -ம் பிரதிவாதியான ஜனார்த்தனன் 7 -ம் பிரதிவாதியான செல்வத்திற்கு வழக்கு சொத்தின் ஒரு பாகத்தினை விற்பனை செய்துள்ளார் என்றால் சரிதான். துஷ்பிரேயோகமாக விற்பனை செய்துள்ளார்.

5) 1 -ம் பிரதிவாதியான ஜனார்த்தனன் 7 -ம் பிரதிவாதியான செல்வத்திற்கு ரூ.4,52,100 க்கு வழக்கு சொத்தின் ஒரு அயிட்டத்தினை விற்பனை செய்துள்ளார் என்றால் எனக்கு தெரியாது. அதன் விற்பனை ஆவண எண் 21852003 என்றாலும் அது 12.12.2003 தேதியிட்ட ஆவணம் என்றாலும் அது நெல்லிக்குப்பம் சார்பதிவு அலுவலகத்தில் பதிவு செய்யப்பட்ட ஆவணம் என்றாலும் எனக்கு தெரியாது.

6) 1 -ம் பிரதிவாதியான ஜனார்த்தனிடம் உயில் பிரகாரம் நிர்வாகம் ஒப்படைக்கப்பட்டது என்றால் சரிதான். அதன் படி அவருக்கு வழக்கு சொத்தினை விற்ற உரிமை உண்டு என்றால் சரியல்ல. 1 -ம் பிரதிவாதியான ஜனார்த்தனன் வழக்கு சொத்தில் இருந்து எந்த வருமானமும் வராததாலும் தான தருமம் செய்ய பணம் இல்லாததாலும் விற்றார் என்றால் சரியல்ல. வழக்கு சொத்தினை விற்க வேண்டும் என்ற நோக்குடன் நீதிமன்றத்தை அனுகினார்.

7) நான் இந்த நீதிமன்றத்தில் 20 வருடமாக வழக்கு நடத்துவது தவறு என்றால் சரியல்ல. கூடுதல் சார்பு நீதிமன்றத்தில் வழங்கப்பட்ட தீர்ப்பு செல்லாது என்று இந்நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ள வழக்கு நிலைக்கத்தக்கது அல்ல என்றால் சரியல்ல. நான் எதற்காக இந்த நீதிமன்றத்தில் வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் வழக்கு சொத்தினை மீட்டு எடுக்கவே நாங்கள் இந்த வழக்கை தாக்கல் செய்துள்ளோம்.

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 05:02:47 +0530

8) வழக்கு சொத்து பொறுத்து 29.06.1908 தேதியில் ஒரு பாக பிரிவினை நடைபெற்றதா என்றால் சரிதான்.

9) கிருஷ்ணசாமி முதலியார் 25.04.1920 தேதியிட்ட உயில் எழுதிவைத்தார் என்றால் சரிதான். அந்த உயிலில் ஜனார்த்தனுக்கு நிர்வாகம் செய்யவும் தான தருமம் செய்யவும் உரிமை அளித்துள்ளார் என்றால் சரியல்ல. அந்த உயிலில் ஆண் வாரிசுகள் தான் நிர்வாகம் செய்ய வேண்டும் என்று குறிப்பிட்டுள்ளது என்றால் சரிதான்.

10) வழக்கு சொத்திற்கு பாசன வசதி உள்ளதா என்றால் அதில் ஏரி பாசனமும் உண்டு போர் பாசனமும் உண்டு. தற்போது 7 பிரதிவாதி வாங்கியுள்ள சொத்தில் பயிர் உள்ளதா என்றால் இரண்டு வருடங்களுக்கு முன்பு சென்று பார்க்கும் போது பயிர் இருந்தது தற்போது எப்படி உள்ளது என்று எனக்கு தெரியாது.

11) எனது அத்தை மகன் ராமசந்திரன் என்பவர் தான் தற்போது அந்த சொத்தில் பயிர் வைக்கிறார் என்றால் எனக்கு தெரியாது. அவருக்கு நான் இந்த சொத்தை குத்கைக்கு விட்டு குத்தகை வாங்கிவருகிறேனா என்றால் எனக்கு தெரியாது, நான் வாங்கவில்லை.

12) ஜனார்த்தனன் செல்வத்திற்கு விற்ற சொத்தின் விஸ்தீரனம் என்ன என்றால் 10 ஏக்கர் ஆகும் . அதன் சர்வே எண் எனக்கு தெரியாது. அந்த சொத்தில் மின்மோட்டர் மற்றும் பம்பு செட் மற்றும் ஆழ்துளை கிணறு உள்ளதா என்றால் உள்ளது. அந்த மின் மோட்டாரின் மின் இணைப்பு எண் தெரியுமா என்றால் தெரியாது.

13) வாதிகள் அனைவரும் எனது சித்தப்பா மற்றும் பெரியப்பா பிள்ளைகள்

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 05:02:52 +0530

ஆவார்கள் என்றால் சரிதான். 2 மற்றும் 3 ஆம் வாதிகள் எனது தம்பிகள் ஆகும். கிருஷ்ணசாமி முதலியார் எனக்கு என்ன உறவு என்றால் எனது தாத்தாவின் அப்பா ஆவார். எனது தாத்தாவின் பெயர் அய்யாகன்னு முதலியாராகும். இந்த வழக்கில் எனக்கு எந்த அனுகுலமும் கிடைக்காது என்றால் அதனை நீதிமன்றம் தான் முடிவு செய்ய வேண்டும்.

14) கடந்த 21 ஆண்டுகளாக தவறான வழக்கினை இந்நீதிமன்றத்தில் தொடுத்து நீதிமன்றத்தின் பொன்னான நேரத்தை வீணாக்கி உள்ளீர்கள் என்றால் சரியல்ல. சொத்தை அபகரிக்க வேண்டும் என்றா நோக்கில் தவறாக சாட்சியம் அளிக்கிறேன் என்றால் சரியல்ல.

ஆவணங்கள் ஏதும் தாக்கல் இல்லை.

7 -ம் பிரதிவாதி தரப்பு குறுக்கு விசாரணை முற்றிற்று .

PHEBE B Digitally signed by PHEBE B
Date: 2025.08.27 05:02:59 +0530